# ஆதி மார்க்க னீதி மொழி

**September 2024**

***இதழ் 38 – செப்டம்பர் மாதம் 2024 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை 38ஆவது மலராக உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. இம் மலரில் சென்னை, காஞ்சிபுரம், சிவகாசி என பல ஊர்களிலும் நடந்த அவையின் அனைத்து நிகழ்வும் வேத சாட்சியாகக் கூறுவது ஒன்றே ஒன்றாகிய ஜீவனைக் குறித்தே தான்.

ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலம் ஆவதற்கான அரும் பெரும் நிலை அனைத்தும் திரட்டி திருப்பாற்கடலை காய்ச்சி வடித்தெளித்திட்ட வேதாந்தம் போல் திருப்பாற் கடலின் ரகசியமும் அதைக் காய்ச்சி வடித்து தெளித்து எடுப்பதற்கான சூதானங்கள் யாவற்றையும் கூறுவதே ஆதி மார்க்க னீதி மொழி.

உலகிலுள்ள ஊடகங்களின் வாயிலாக எத்தனை தகவல் பரிமாற்றங்கள் நடந்த போதிலும், அவை யாவும் கூறாத அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல் எனும் தேவரகசியச் செயலை நிஜமாக்கும் இடத்தை இயம்பும் இடமே ஆதி மார்க்க னீதி அவை. இதன் ஒரே நோக்கம் எத்தனை கோடி மக்கள் வந்தாலும் அத்தனை பேர்க்கும் அளக்கக் கூடிய குறையாத வற்றாத ஜீவநதியாக கஜானாவாக ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் அடையக் கூடிய அரும்பெரும் நிலை யாவும் அடிநாதமாகக் கொண்டு அறிவுக்கான அத்தனை சான்றும் அளிக்க வல்ல மூல மந்திரம், பாத பூஜை, மகா சங்கல்ப மந்திரம் இவற்றை செயலாக்குவதே.

மக்கள் அவசியம் பார்த்து பயன் பெற வேண்டிய திருச்சிற்றம்பலப் பொருளை அடிநாதமாகத் தாங்கி உயர்ந்த நோக்கமுடன் வரும் சஞ்சிகையே ஆதி மார்க்க னீதி மொழி. பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் 76 வருட காலம் வைவஸ்ய தவப் பாடுற்று, தான் பெற்ற பெரும்முதல் இன்னதென இரங்கி வந்து வெளியாக்கிய நாதமாகிய அவர்களின் நாமத்தை மக்கள் உணர்ந்து பயன் பெற வேண்டிய ஒரே குறிக்கோளுடன் வருவதே இச் சஞ்சிகை. இதனைப் பார்த்து படித்து பயன் பெறும் மார்க்கத்தை அறிய அவாவுறும் எதார்த்த நன்மன மக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று, அன்பே சிவமென ஆரும் அறிந்திட அவாவுடன் அழைக்கிறது ஆதி மார்க்க னீதி அவை.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*இத்தூலத்திலிருக்கும் போதே, தெய்வத் திருனாடாகிய பிரணவ னாட்டிற்குப் போய்வரும் திருவிளையாட்டைப் பழக்கித் தருவதுவே மெய்க்கல்வி. அதுவே சாகாக் கல்வியாகிய பிரம்ம வித்தை.*

*னமது சொந்த தேகம் அழியாதது, அனாதியானது. அதைப் பெறவே னாம் பிறந்நோம். உன் ஊனக் கண்ணுக்கு அறிய முடியாத பொருளாக உன்பால் அது வைக்கப்பெற்றிருக்கிறது. அதையே மூலமந்நிரம், பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா என்பர். அதைப் புனற்றுறைக் கோயிலாக இதயாசனத்தில் போய்ச் சந்நிப்பதையே வேதம், பிரம்ம வித்தை என்று கூறுகிறது.*

*உன்னுடைய இதயத்தின் இருளை னீக்கி, கோடி சூர்யப் பிரகாச ஆணிமுத்தாகிய மணி மந்நிர மவுனவித்தை, அங்நுக் கொண்டுவந்து வைப்பவரே குரு. இச்செயலன்றி ஒருவன் எவ்வளவு படித்து ஓதினவனாயிருந்நாலும், எவ்வளவு பூஜை தொழுகை வணக்கம் உடையவனாக இருந்நாலும், எவ்வளவு புகழ் ஆட்சி சம்பத்து உடையவனாக இருந்நாலும் குருவாக மாட்டான்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 ஆகஸ்ட் மாதம் அவை நிகழ்வுகள் – 2024 செப்டம்பர் மாதம் வெளியீடு

## 01-08-2024 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி, வள்ளல் பிரான் அருளிய **சச்சிதானந்த கடலில் வெண்ணிலாவே...** என்ற திருஅருட்பா ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அறிவுடையார் எல்லாம் உடையார் என்ற வள்ளுவரின் வாக்கின்படி, அறிவு சார்ந்த பூரண நல்வாழ்வு நல்கும் வழியே மெய்வழி என்றோர் மேடு என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். குருவின் அருள் படிந்திட அறியாமை இருள் பொடியும். இறைவனிடம் வாங்கி வந்த அமானிதக் கடனை அடைக்க முயல்பவனே மனு. பொய்யும் மெய்யும் பிரித்தறிந்து நித்திய சொர்க்கபதி வாழ்வை கைக்கொண்ட மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

**திருமெய்ஞானக் கொரல்: வாக்கியம் எண் 3ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**
ஐம்புல நுகர்வின் காரணப் பொருளையும், இறைவனின் இருப்பிடமாகிய இரவு பகலற்ற கைலாசம் வைகுண்டம் எனும் இடத்தையும் அறிந்து வாழ வைப்பதே உபதேசம்.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* மெய் குருபிரானை தேடி அடைந்து, வினை தீர்க்க விழையும் மக்களுக்கான வேதமே **மஹரிபத்து மாலை.** மனம் புறத்தில் அலையாது, நினைவில் அறிவின் கவனம் கொண்டு, இறைவனை தரிசிக்கும் ஐந்தாவது நிலையான றாலியா எனும் நப்ஸை அனுபவத்தால் தான் அறிய முடியும்.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**
குறை மனமின்றி, பூரண நிறை மனத்துடன் வாழ்வதே மெய்ம் மணம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். நானிலம் கைவிட்டு நிறை மணமாகும் உள்ளமை ரகசியத்தை உண்மையாக ஆக்க உதவுவதே இன்னூல் என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 03-08-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **தேசுநிறமாய் நிறைந்த வெண்ணிலாவே...** எனும் திருஅருட்பா பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
தட்சிண முகமாய் திரும்பிய சூரியன், ஒரு ராசிக்குள் பிரவேசித்து 18ன் நிலைகளை உள்ளடக்கியுள்ள 108 நட்சத்திர பாதங்களின் ரகசியத்தை உணர்த்தும் நாளே **ஆடி பதினெட்டாம் பெருக்கு.** ஆசானின் பொங்கி வரும் செங்கனதி கங்கையில் நீராடி, சூரியனாகிய மனம் ஒடுங்கி, பிரம்மமாகி பதியை எட்டும் பிரம்ம தத்துவத்தின் ரகசியம் உணர்த்தும் நாளே **ஆடி பதினெட்டாம் பெருக்கு.**



Copyright © AMNA Trust, Chennai

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் – 183 :** புண்ணிய உருவான ஆசானின் அருளமுதம் பருகி, பாவ உருவான தீய மனதைப் பலியிட்டு, அறிவு பூரிக்கும் புண்ணியச் செயல் பழகி, இறவா வரம் கைவரவாகும் நாளே திருநாளாகும். மகா மகசூக்கான இருதயத்தைப் பிரகாசமாகக் கண்டு, அதன் மீது அன்பு சாய்ந்து வணங்கும் மெய் வணக்கத்தால் ஜீவன் கண்ட ஜென்மசாபல்ய குலம் ஆவதே மெய்வழி எனும் மேடாகும்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம்: தீமோத்தேயு 2 : 2 : 11** *இந்த வார்த்தை உண்மையுள்ளது. நாம் அவரோட கூட மரித்தோமானால் அவரோடே கூடப் பிழைத்தும் இருப்போம்*
**பேதுரு 1 : 1 : 23** *என்றும் நிற்கின்ற ஜீவனுள்ள தேவ வசனமாகிய நித்திய வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறீர்களே.* ஆதியிலே தேவனிடமிருந்த வித்தில்லா வித்தான தேவ வசனம், இவ்வுடலே நான் எனும் னரனின் அறியாமையை மரிக்கச்செய்து **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்** எனும் நித்திய ஜீவனை அறியும் மறுபிறப்பில் ஆக்கி வைக்கிறது. பரிசுத்த ஆவியினால், அழிதேகத்தில் உள்ள அழியாத அறிவு தேகத்தில் குடியேறி வாழ்வதே தேவப் பிறப்பாகும்.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**

அழியா நித்திய அமிர்த வர்ஷிப்பை அழி தேகத்தின் மேல் பாய்ச்சி, நபுசாக இருந்த மனதை சிபத்தெனும் அறிவு தேகமாக மாற்றும் மெய்ச் செயலே பிருக்த யோகம். மனுவுக்கான சத்திய வார்த்தைகள் வெளியாகும் இடமும் மொழியும் வேறாக இருந்தாலும் மெய்ச்செயல் ஒன்றே ஆகும். உள்ளும் புறம்புமாய் எங்கும் நிறைந்த இறை பொருளே பூரணம், பரிபூரணமாக உள்ளது. தேனுள் இருக்கும் சுவை போல் உடலுள் உறைந்துள்ள ஈசனை அறிவது பூரணமாகவும், புறத்தில் பஞ்ச பூதங்களையும் இயக்கும் இயற்கையை அறிவது பரிபூரணமாகவும் உள்ளது. குருவருளால் இதயம் கடல் போல் விரிந்து திரினேத்திரம் மூலம் விஸ்வரூப தரிசனை கண்டபின் உலகம் கடுகளவாக உள்ளதை அறியலாம். குருவின் மலர்ப்பாதம் தொழுதோர் தாம் வாழும் காலத்திலேயே முத்தாபம், இருவினைகள், இறுதிநாள் வரும் கசப்பு, கொடுமரணம் - இவை அணுவளவும் அணுகாத பலன் கைவரப் பெறுகின்றனர்.

இந்து சமயத்தில் உள்ள 114 சாஸ்திரங்களும், திருக்குரானில் உள்ள 114 அத்தியாயங்களும் இல்மு எனும் சாகாக் கல்வியை போதிக்கவே பெரியோர்களால் அருளப்பெற்றுள்ளது. உடலைத் தாங்கும் பார ரகசியப் பொருளை பாரவான்களின் துணை கொண்டே அறிய முடியும். விடியலெனும் வெளிச்சப் பொருளை தன்னுள் அறிந்து உயிருக்கும் மேலான ஒழுக்கத்துடன் வாழ்வதே பூரண வாழ்வாகும். மனதின் அடிமையான புலன் பொறி யாவும் பூரண அறிவாகி ஜீவன் கடைத்தேறும் செயலுடைய இடமே ஆதி மார்க்க னீதி அவை. ஜீவனுக்கான செவியுணவை ஓயாது சலியாது வழங்கி நம் பிறவி மாற்றும் குருபிரானின் நிச்சய மெய்ச் செயலுக்கான விலை அவரவரின் தலையே. அழியாத அறிவுச் செல்வத்தை அகிலம் முழுதும் சேர்க்கும் களமாக உருவாகும் சரவண நந்தவனத் திருப்பணியில் எல்லோரும் மனமுவந்து பங்கேற்று மேன்மை பெறுவோம் என்ற குருபிரான் அருளுரையுடன் பரிசுத்த ஆவி தெய்வத்தின் பொற்பாதம் பணிந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 04-08-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி, **தன்னே ழின்னபு சின்புற மேவுற...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி கல்பனா:* ஐம்பொறிகளின் அரசனாம் ஜீவனே அரூப வடிவாக அனைத்தையும் எசன்சு வடிவில் சுருட்டி மடக்கி தன்னுள் வைத்திருக்கிறது என்பது சாலை ஆண்டவர்கள் திருவாக்கு. ஆணவம், கோபம், பொறாமை, புலன் இன்பம் **ரஜோ குணமாகவும்** ; மந்த புத்தி, மயக்கம், பேராசை, பிறருக்கு கேடு விளைவித்தல் **தாமஸ குணமாகவும்** ; பொறுமை, உறுதி,



Copyright © AMNA Trust, Chennai 

சகிப்பு தன்மை, மன அடக்கம், புலனடக்கம், பற்றற்று பிறருக்கு உதவி செய்தல் **சாத்வீக குணமாகவும்** மனிதனிடம் உள்ளது. சர்வ ஜீவ பேதங்களின் குணத்தை சாத்வீக குணத்துடன் தன்னில் அறியும் அறிவைப் புகட்டி, நரனை மனுவாக்கி தேவனாக்கும் பெரியோர்களின் செயலே ரசவாதம். நிர்க்குண நிலையிலுள்ள பெரியோர்கள், நம்மை காலம் கடந்த காலனற்ற இடத்தில் குடியேற்றி வைக்கிறார்கள்.




*ஜீவசகோதரி நாகமணி:* அறிவெனும் ஜோதியை ஏற்றி அறியாமை எனும் மனதின் மாசகற்றி அழியாப் பொருளை அறிய வைத்த அருட் குருவே ஆசான். மனிதனின் தலையாய கடமையை அறிய வைக்கும் ஆசானின் நாத தொனியே அருட்பெருஞ்ஜோதி. பேரறிவு கொண்டு பேரின்பத்தை அனுபவிக்க வந்த தோற்றமே மானிடச்சட்டை.

*ஜீவசகோதரி பூர்ணிமா:* தன் சாயலில் இறைவன் நம்மை படைத்தது அவனுடன் இரண்டறக் கலக்கவே. அசைவற்ற சிவம் அசைவுக்கு வரும் சக்தி வடிவாகி எண்ணம் விரிகிறது. அது ஒடுங்கி மேல் நோக்கமாக மாறும் போதே பிறவித் துன்பம் நீங்கி பிறவாமை பெற முடியும். காலக் கிரகங்களின் பிடியில் சிக்கி இருக்கும் நம்மை மீட்டெடுக்கும் காலாதீதனாக வருபவரே குருபிரான்.

*ஜீவசகோதரி கலைவாணி:* அசலை அறிய வைக்க பெரியோர்கள் உண்டாக்கிய தத்துவ வடிவங்களே கோவில்கள். சிற்றறிவாகிய மனதின் அனித்திய அழிவுப்பாதை குருவருளால் பேரறிவாகும் போதே நித்தியமாகிறது.

*ஜீவசகோதரி லதா உதயசூரியன்:* வாழும் காலத்தில் அடையும் செயலே அடக்கம். சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி அடக்கத்தை மடக்கிப் பிடித்து அனந்தராகும் செயல் நடைபெறும் இடமாக ஆதி மார்க்க னீதி அவை திகழ்கிறது.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கடோபனிஷத் - கடம் + உபனிடதம்.** சர்வ சம்பத்தும் உள்ளடக்கிய பரிசுத்த நினைவே அழியாத னித்திய உடலெனும் அக்கடம். இக்கடம் எனும் அழிவுடல் விட்டு அக்கடத்துள் ஆக்கி வைக்கும் ஆசானின் அமுத மொழியே உபதேசம், உபனிடதம், தீட்சை என்பன. மனிதன் அடைய வேண்டிய பெரும் பதமான மோட்சத்தை பற்றி கூறுவதே கடோபனிஷத். புறவுலக அவித்தை வாழ்வெனும் ஐயறிவு நுகர்ச்சி விட்டு, அகவுலக ஆறறிவு வாழ்வில் குடியேற்றும் ஆசானின் நாதமே அமுத சஞ்சீவி. அதன் உதவியால் அந்தகரணத் தெளிவு கொண்டு அறிவதே ஆன்மா.

*ஜீவசகோதரர் குமார்:* வினையால் விளையும் மானிடச்சட்டை நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு இவற்றிற்கு உட்பட்டது. பிறவிச் சுழலிலிருந்து விடுபட சிறப்பெனும் செம்பொருளாகிய அறிவைக் காண வேண்டும். குணங்களின் செயலே பேதத்தின் காரணம். பேதமற்ற சமரசமே சன்மார்க்கம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஒன்றே ஒன்றான மெய்யை அறிவதே மெய்யுணர்வு. அகத்திலுள்ள அழிவற்ற நான்கு தேக ரகசியம் அறியும் போதே அழிகின்ற அனித்திய தேகம் நாமல்ல எனப் புரியும் என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 08-08-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி **வேதமுடி மேலிருந்த வெண்ணிலாவே...** எனும் திருஅருட்பா பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
சுத்த அறிவுடன் வேதவழி வாழும் மனதற்ற பரிசுத்தமே நித்திய மகிழ்ச்சி தரும். மனதை அறிவாக மாற்றும் தந்திரமே உபதேசம். மனதின் பிடியிலிருந்து விடுதலை பெற்று ஜீவசுதந்திரம் பெற்ற மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.
**திரு மெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் 03ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**
ஞானம் தேடி வரும் மக்களின் தலையில் செயலுள்ள தீர்க்கதரிசனம் ஏற்றப் பெறுகிறது. அழிவுடலை விட்டு அழியாத நித்திய உடலை நிர்குண நிலையில் அறிவதே ஞானம்.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **திருக்குரான்: அத்தியாயம் 05 - வசனம் 161 :** ஆத்மா எனும் அவரவரின் சொந்தப் பொருளை அடையும் நேரான வழி அருள்பவரே குருபிரான். தீன் எனும் மாசு மருவற்ற குண்டலியை பிரணவ சூலாக, முமீனாக, ஆதம் பாதமாக, குருமுகமாக அறிந்து தொழுவதுவே மெய்த் தொழுகை. இஸ்லாத்தின் கடமையில் ஒன்றான தர்மம் என்பது எமன் பிடியில் இருந்து நம் தலையைக் காத்தருளும் குருவின் செயலாகும். இறைவன் கொடுத்த சீதனமாகிய அமானிதப் பொருளை தன்னில் அறிவதே மனுவின் தலையாய கடமையாகும்.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**
நரனை மனுவாக மாற்றும் குருவின் செயலே மேலான தர்மம். நான் எனும் அகந்தை கொண்டு வாயளவு பேசும் எல்லையை அறியாதவனே இறைவனின் பகைவன் என்பது சாலை ஆண்டவர்களின் திருவாக்கு. திருமறையாம் அருமறையான ஆசான் தன் அருளால் வியந்து நயந்து ஆற்றுப்படுத்தும்போதே நம் அகந்தை மறைந்து மனம் பிரம்மமாகிறது. மெய்உணர்வுடன் நற்றாளைத் தொழச் செய்யும் மெய்க்கல்வியை அருளும் பெரியோர்களே தியாகச் செம்மல்கள். பற்றற்ற பரம்பொருளை பற்றிட ஆசான் அருளும் அறிவே உபதேசம். **சன்மார்க்கம் எனும் சரம், சமரசமாகும் செயல் நடைபெறும் இடமே சரவண நந்தவனம்.** அதுவே ஆசானின் தேனாறு பாயும் பிருந்தாவனம். மெய்ஞ்ஞானம் பெற்ற ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் சீர் சிறப்புடன் வாழ குருபிரான் வழங்கிய அருளாசியுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 10-08-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி **ஆதி அந்தம் என்றுரைத்தார் வெண்ணிலாவே...** எனும் திருஅருட்பா பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆதி அந்தமற்ற இறை வஸ்து ஒவ்வொரு மனுத் தலையுள்ளும் அறிவு வடிவாக வீற்றிருப்பதை வித்தில்லா வித்தாகிய ஆசானின் னாதம் மூலமே அறிய முடியும் என்ற அரும்பெரும் நிலைகளை வள்ளல் பிரானவர்கள் வெண்ணிலா என வர்ணித்து அருளியுள்ளார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் – வாக்கியம் 184 : குருபிரான் அருளமுதம்:**
வேத கலைவாணித் தாயாக வரும் தெய்வ ஆசானின் அமுத வர்ஷிப்பு பிறங்கும் எல்லையாகிய பூம்பாதத்தின் சிறப்பே ஆதியின் னாவு, சிவன், கயிலை மாதவன் னாவு என்ற திருநாமங்கள் உணர்த்துவதாகவும், னாவுக்கு பெரிதாக உலகமில்லை என்ற இரகசியமாகவும் உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai September 2024

*ஜீவசகோதரி பானுமதி:* **அல் – குரான் : அத்தியாயம் 20 - தாஹா :** இறை நம்பிக்கை உள்ளவர்களிடம் பொறுமை, சகிப்பு தன்மை, உள்ளதே போதும் என்ற மனப்பான்மை, இறைவன் வகுத்த விதியில் திருப்தி கொள்ளல், தம் செயல்களுக்கு தாமே மதிப்பீடு செய்தல் போன்ற பண்பு நலன்கள் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. **லாகிர் - பாத்** எனும் **இம்மை - மறுமை** வாழ்வு பற்றி வலியுறுத்தும் குரான் திருவசனங்களின் மெய்ச்செயலை ஒரு மெய்க் குருபிரானின் வாக்காகிய தீயின் மூலமே அறிந்து அடைய முடியும்.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**

புதையலான பெருந்தவ குன்றிலிருந்து வெளியாக்கப் பெற்ற பூரணத்துள் இருக்கும் இரத்தின, மாணிக்க, வைர, வைடூரியங்களை எடுத்து போதுமான வரை அணிந்து கொள்ளுங்கோ என்ற சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாத ஒலிவாயுரையானது ஆசான் அருளால் நம் அனைவருக்கும் நிஜ ரூப தரிசனையாகிக் கொண்டிருக்கிறது. உலகை உய்விக்க திருஅவதாரம் தாங்கி வரும் பெரியோர்களின் அரும்பாடும், துயரமும் சொல்லொணாது. அப் பெரியோர்களின் தியாகச் செயலை தம் உள்ளம் உருக நினைப்போர்க்கே மெய்ப்பயன் கிட்டுகிறது. ஐயர் திரு சன்னிதியின் முன் அமர்ந்து அவர்களின் அருள் னாவிலிருந்து வெளியாகும் திகட்டிடா தீட்சையை பெறும் போது, நம் திருட்டு ஈன கெர்வங்கள் அனைத்தும் ஒழிகிறது. மேலும், ஜீவ குருவின் திருவடி நிழலில் நித்தம் திளைத்து, சீர் குளிர் காய்வது போல் அகலாது அணுகாது வாழ்பவர்களே **பூரணனான புதியவன்** என்ற இறை நிலையை அடைந்து அழியா திருநாட்டை ஆள்கிறார்கள் என்ற அருளமுத வர்ஷிப்புடனும், பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

*எதனால் சிவரூபத்தினையும் தனது ஆத்ம ரூபத்தினையும் தானாக அறியமாட்டானோ அதனால் குருவில்லாதவன் மிருகமென்றே, பூச்சியென்றே, விட்டிலென்றே சொல்லுதற் குரியவனாகின்றான்.*

***~ குரு கீதை***

## 11-08-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

சாலை ஆண்டவர்கள் அருளிய **ஜகத சற்குணா லங்விர்த சன்னதர்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஐவகை பொறுப்புடைய அண்ணலாக, பரமனாக, குருவாக, அகம் புறம்பும் கண்டாண்ட சலாசனராக, யுகங்கள் னான்கையும் கைகொண்ட கோடூழியராம் மகதிஆண்டவர், மனித உருதாங்கி நம் பிறவிப்பிணி தீர்க்க யுகந்நோறும் வருகிறார்கள். கோடியெனும் அறிவு வடிவாக வரும் அவர்களே நம் நெற்றியில் மங்காத கவசத் திருநீறு பூசும் கங்காளன். மனமெனும் இரும்பில் தளிர்த்து வளரும் துருவாகிய மாயை மறைந்திட மெய்யறிவு உதயம் காட்டி, அறிவு ரூபத்தில் ஆக்கும் ஆசான் அவர்களே நம் அகந்தை கிழங்கை அகற்ற வல்லவர். மும்மலம் கருகி முச்சுடர் தோன்றும், மனோலயமாகிய எழுதாத எழுத்தின் வடிவமே வலம்புரிச் சங்கு. குருவின் நோக்கிற்கு இணங்கும் சுபாவமே உலகப் பற்றிலிருந்து நம்மை விடுபடச் செய்யும். குணங்களுக்கு அப்பாற்பட்ட குணமெலாம் தாண்டிய குணாதீதரான குருபெருமானே, னபுசாக இருக்கும் மனதை சிபத்தெனும் அறிவு ரூபமாக மாற்றுகிறார்கள். சர்வ சன்னதங்களும் பெற்று வரும் பெரியோர்களிடம் வஞ்சுகமற்ற எதார்த்த ஒட்டுதலோடு இருந்து, அவர்களின் பேரிரக்கத்திற்கு ஆளாகும் போதே நம் பிறவிப்பிணி தீரும் என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே னிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai September 2024

**11-08-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரி ஆர்த்தி:* ஆசானின் அருளமுதே அந்தகனின் பிடியகற்றி நம் பாவம் நீக்கி இறைவனின் இல்லமாகிய இருதயத்தை பிரகாச ரூபமாக காணச் செய்கிறது. அவரின் பிரம்மவித்தை செயலே நம்மை வெற்றி வாழ்வில் குடியேறச் செய்கிறது.

*ஜீவசகோதரி கனகத்தாய்:* அவரவரின் நாமமே நாதத்தின் இருப்பிடம். இதை அறிவதே இன்னில வாழ்வு. இறைவன் மனுவுக்கு தந்த தனிச் சீதனமே மனம். அது சிற்றின்பம் தேடி அலையும் அசைவச் செயலை சைவமாக்கி இராஜாங்க யோகம் மூலம் பேரின்பம் அனுபவிக்க ஆசான் அருளும் பேரறிவே உபதேசம். குருவருளால் சத்தும் சித்தும் அறிந்து அடையும் ஆனந்தமே சச்சிதானந்தம்.

*ஜீவசகோதரர் சோலையப்பன்:* ஜீவன் குடியேறிய அடையாளமே சத்தம். சர்வ ஜீவ பேதங்களின் சத்தத்தை பிரித்தறியும் வல்லபம் கொண்ட மனிதனே சத்தம் பொதிந்துள்ள இடத்தை அறிய வல்லவன். அருவுருவாக வரும் இசையின் நாதமே இறைவனுடன் இரண்டற கலப்பதற்கான இனிய வழி. இறைவனின் சாயலாகிய சப்தமே இன்சானின் உன்னத அடையாளம். குரு மொழியாக வரும் ஔஷதமே நம் பிறவிப்பிணி தீர்க்கும் சஞ்சீவி.



*ஜீவசகோதரர் கார்த்திகேயன்:* ஞானத்தின் வெளிப்பாடே வட்ட வடிவ சக்கரப் புரட்சி. புறத்தில் கருப்பு நிறத்தில் நாம் காணும் சக்கரம் அகத்தில் இருளகற்றும் காலச் சக்கரத்தை உணர்த்தும் வடிவமே. காற்று நிரம்பிய சக்கரம் இடம் விட்டு இடம் செல்ல உதவுவது போல், இக்கடம் விட்டு இறைவன் இருக்கும் இடமான அக்கடம் செல்ல ஏதுவான சக்கரமே அவரவரிடமும் விளங்கும் காலச் சக்கரம்.

*ஜீவசகோதரி விஜயசித்ரா:* **ஆக்கி யோனந்ந வல்லிரு ளுள்ளிருந் நூக்கி யேவெளி யாக்கிய னாள்த்தலை** என சாலை ஆண்டவர்கள் அருளிய படி இருளிலிருந்து வெளிப்படுவதுவே நாள். பஞ்சாங்கத்தின் அனைத்து அம்சங்களும் உள்ள நாளும் கோளும் கடந்து வாழ்வதே பிறவாமை. சர்வமும் உள்ளடக்கிய ஆகாயமே நமது வயது வாழ்நாளின் இருப்பிடம். காலத்தை நம் கைவசமாக்கும் ஆசானின் செயலே பிரம்ம வித்தை. குருவருளால் அறிவுத் தெளிவுடன் கங்குல் பகலற்ற இடத்தில் குடியேறி வாழும் நாளே திருநாள். நவக்கிரக கோள் மாற்றும் நாத ஜோதிடரே கிரகஸ்தன். ஒரு ராசிக்கு 2¼ நட்சத்திரமாக நட்சத்திரத்திற்கு 4 பாதமாக, 12 ராசிகளை 27 நாட்களில் கடக்கும் சந்திரனின் நிலையை சாலை ஆண்டவர்கள் அகமியச் செயலாக அருள்பாலித்து உள்ளார்கள். ஐந்தாவது யோனியில் பிறந்த அகரம் அறிந்த அமரர்களே எட்டாம் நாள் ரா ஞானஸ்தானத்தின் சிறப்பறிவர். நாதம் விளைந்த நாயகனின் நாவின் வல்லபமே நாளின் சிறப்பை அறிய வைக்கும் நாவாஸ்திரக் கோடாயிதமாம்.

*ஜீவசகோதரி ஹேமலதா:* நித்திய மனுவே தலமொரு நான்கும் பெற்ற னீதியெனும் பொருள். மெய் ஆசான் அருளால் வினையற்ற னித்திய தேகத்தில் குடியேறி நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்யாமல் இருப்பதே அஹிம்சை, அறம், அளவிலா ஆனந்தமாகும். பஞ்சமா பாதகம் தன்னிலறிந்து அதைத் தவிர்க்கும் வழியே மெய்யான மெய்வழி.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி லக்ஷ்மி:* குருபிரான் நம் இருதயத்தின் இருளகற்றி ஜீவதேகத்தில் குடியேற்றி வைக்கும் நாளே பிறந்தநாள். என்றும் குறையாப் பணத்தை நம் சொந்தமாக்கி, சொர்க்கபதி வாழ்வு வாழச் செய்யும் குருபிரானே பிறவிப் பெருங்கடல் நீந்த அருள் புரியும் பிறவா முதல்வன்.

*ஜீவசகோதரர் ஸ்ரீதுல்தாஸ்:* படிப்பதன்றி பழகுவதே வேதம். விரயமாகும் ஒவ்வொரு மூச்சிலும் நிகழ்வதே மரணம். மாறாத மெய்யே ஆன்மா. அதன் நாமமே அவரவரின் நாமம். உடலில் நமது இருப்பிடம் அறியாதிருப்பதே அறியாமையின் உச்சம். ஆசான் அருளால் தன்னை அறியும் தவ முறையை அறிந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 15-08-2024 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வள்ளல்பிரான் அருளிய **தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே** என்ற திருஅருட்பா பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

சாலை ஆண்டவர்கள் தன் நாத தொனியால் புலனுக்கு அடிமையான நரனின் பாவத்தை நாசம் செய்து, சாகாத சன்மார்க்க நிலை அருளினார்கள். ஆசான் அருளால் **சு** எனும் மந்திரப் பொருளை தன் திறமாகிய தந்திரத்தால் சொந்தமாக ஆக்கிக் கொண்டு நிஜமான சுதந்திரம் பெற்ற மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

**திருமெய்ஞானக் கொரல் - வாக்கியம் எண் 4: குருபிரான் அருளமுதம் :**

ஆசான் அருளால் அறுசுவை ஒளிக்கும் இடமறிந்து ஆரூரான் ஆன பின்பே, மத பேதம் நீங்கி எம்மதமும் சம்மதம் என்பதின் ரகசியம் விளங்கும்.

**வினா விடையாக குருபிரானின் அருளமுதம்:**

கண்ணும் காதும் நேர்பெற்ற மனுக்கள் யார் எனில் ஆசான் அருளும் நயனக் கலையைக் காணும் கண்ணும், அருளமுதத்தை உணரும் காதும் கொண்டவர்களே மனுக்கள்.

மனுவிற்கு கடவுள் எதற்கு வேண்டும் எனில் ஆசான் அருளும் அறிவால் கடவுளை அறிந்து பிறவா நெறி பெறவே.

கோவில்களில் இருக்கும் தத்துவ ரகசியங்கள் யாதெனில் அடி முடி நடுவான ஜீவனின் அக்கினி வடிவமே தீப ஆராதனையாகும்.

கடவுளைக் காட்டும் குருவின் நாதமே மணி ஓசையாகும்.

ஜீவனின் ரகசியமான உணர்வெனும் கம்பமே கொடி மரமாகும்.

இறைவன் இருக்கும் தலமாகிய தன் எனும் ஜீவ குகையுள் அழைத்துச் செல்லும் நாதாந்த திறவு

கோலான குருபிரானின் வாய்மையே கோபுர வாசலாகும்.

நம் அறியாமையை பலியிடும் இடமே பலி பீடமாகும்.
ஆறாவது அறிவின் லட்சணம் விளக்கும் தத்துவமே சிற்பங்களாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

உயிரின் ஓயாத் தொழுகையை உணர்த்துவதே ஆறு கால பூஜையாகும்.

மெய்ப் பொருளின் ரகசியம் உணர்த்துவது கண்ணாடியாகும்.

இறைவனிடம் அழைத்துச் செல்லும் பிரம்ம கூடகராக துவார பாலகரும், தேசிகர் வாசகமாகிய தீர்த்தத்தை உணர்த்தும் கோமுக தீர்த்தமும், சார்ந்தவரை தன் மயமாக்கும் ஆசானின் திருவாக்காகிய தீயை உணர்த்தும் விபூதியாகிய திருநீறும், அநீதமாக இருக்கும் நவநீதங்களை உணர்த்தும் நவக்கிரகங்களும், ஜீவாத்மா பரமாத்மா நிலையை உணர்த்தும் உற்சவர் மூலவர் சிலைகளும், ஓரறிவாய் விளங்கும் தெய்வத்தின் நிலை அறிவிக்கும் தலவிருட்சமும், தத்துவ ரகசியங்களாக, தன்னை அறிவதற்கான அசலை நினைவூட்டும் நகல் வடிவங்களாக உள்ளது.

ஆசான் அருளால் அறிவுக்கண் திறக்கப் பெற்ற மக்களுக்கே இவையாவும் செயல் அனுபவமாக இருப்பதை உணர முடியும், என்ற குருபிரானின் அருளமுதுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 17-08-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி **ஞான மயமாய் விளங்கும் வெண்ணிலாவே...** எனும் திருஅருட்பா பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
வெண்ணிலவாக வரும் ஆசானின் மதியொளி பாய்ந்ததும், நம் மனதின் அறியாமை அகன்று அறிவாகும் செயலே, பாலுக்குள் மோரை விட்டு பதம் பார்த்துக் கடைந்து நெய் ஆவதான ஆவணி மாதத்தின் சிறப்பு. சூரியனின் வெப்ப சலனத்தால் நிகழும் பருவ மாற்றம் போல் மனமாகிய சூரியனின் சலனத்தால் இருள், விடியல், வினை, வினைப்பயன் யாவும் உண்டாகிறது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் 185:** தாயின் மிக்காங் கருணையுள்ள பெரியோரைப் பேணித் தமராகக் கொண்டு உத்தமராகும் செயலே **அன்பும் சிவமும் ஒன்று** எனும் ஜீவனின் ரகசியம் அறிவதாம். பெரியோர்களின் கைமுதலான மெய்ஞ்ஞான நிலைகளை அறிந்து உணர்ந்தோர், அதனை நன்மக்களிடம் கொண்டு சேர்ப்பதே மேலான தர்மமும், புண்ணியமும் ஆகும்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம்: யோவான் 4 : 13, 14** *இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக, நான் கொடுக்கும் தண்ணீரை குடிப்பவனுக்கு ஒருக்காலும் தாகமுண்டாகாது, அது அவனுள் நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும் என்றார்.* கர்த்தராகிய குருபிரான் தன்னை நாடி வந்த மக்களுக்கு அவரவர் சிரசில் இருக்கும் நல்ல தண்ணீர் திருப்பாற் கடலிலுள்ள ஜீவத் தண்ணீரை அமிர்த வர்ஷிப்பாக வழங்கி, ஜீவனின் தாகத்தைத் தணிக்கிறார்கள். நித்திய ஜீவனை அளிப்பேன் என்ற வாக்கு தத்தத்தின்படி ஆசானின் திருவாக்கில் விசுவாசம் கொண்டவன் உள்ளத்துள் மீண்டும் தாகம் உண்டாகாத ஜீவ நீரூற்று மதி அமுதமாக சுரக்கும்.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம் :**

பெரியோர்கள் முன்னிலையில் நம் அறியாமையை ஒத்துக் கொள்வதே ஞானத்தின் திறவுகோலாகும். **நாராயணா, பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் எனும் னாமமே அவரவரின் ஜீவனாக உள்ளது.** பூரணம்-பரிபூரணம் என்பதனை ஜீவாத்மா-பரமாத்மா நிலைகளாக சாலை ஆண்டவர்கள் ஆதி மான்மியத்தில் அருளியுள்ளார்கள். முப்பொருள்



Copyright © AMNA Trust, Chennai September 2024

வீணாக்கும் அழிஅவா மனம் விட்டு மும்மலம் கருக முச்சுடர் தோன்றச் செய்யும் ஞான பதத்தையே சாலை ஆண்டவர்கள் பாடல்களாக அருளியுள்ளார்கள்.

அனித்திய உடல் தாங்கி வரும் மெய்ஆசானைச் சரணடைந்து, அவர்கள் னாதத்தில் ஆகிக் கொள்வதே பிறவானெறி பெறுவதற்கான வழி. னாமமெனும் னாதத்தின் அருளால் சுழியாகிய முனை கண்டு வாசி வசமாகும் னிலையே, இறை இல்லமாகிய மக்காமில் குடியேறும் செயலாகும். சின்முத்திரை கண்டு ஓதும் செயல் அறிந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். எமகண்டம் கடத்தும் குருவின் அருளே அண்டரண்ட உச்சியாம் சிரத்தில் இருக்கும் னித்திய ஜீவனை அறியச் செய்து சிரஞ்ஜீவி ஆக்கும். நம்மை செம்மை சீர் முகப்பினுள் சேர்த்து வைக்கும் குருவருளும் திருவருளும் சேர்ந்த பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்குவோம் என்ற குருபிரானின் அருளுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 18-08-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பிரம்மோதய மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் அருளிய **அந்நமே சிந்நை பதிந்ந...** என்னும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

**வேதமணித் தாயென் வாலாம்பிகையின் பாதம்** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, அபய அஸ்த முத்திரையோடு விளங்கும் வாலைத்தாய், சாகாக் கலையை கற்றுத் தேர்ந்த குரு தத்துவத்தின் இரகசியமாகவும், அமர்ந்திருக்கும் திருக்கோலம் வாலைத்தாயின் அம்சமே நாம் என உணர்த்தும் தத்துவமாகவும் உள்ளது.

*ஜீவசகோதரி பத்மாபதி:* னித்திய வாழ்வுக்கென வந்த மனுவினிடம் உள்ள தன்னை அறியும் அறிவே னீதியாக, ஆறாவது அறிவாக உள்ளது. மனிதனுள் இருக்கும் னித்திய வல்லப வஸ்துவே நெடுங்கால வாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணம் தருகிறது. னித்தியனாக வரும் குருபிரான் மூலமே னீதியை அறிந்து கொள்ள முடியும்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* கள்ளமாம் உறக்கத்தை சத்துரு என சாலை ஆண்டவர்கள் எச்சரிக்கிறார்கள். மனதின் மாயையாகிய தூக்கம் விட்டு, தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது துரியமெனவும், அது கடந்த உயிர்ப்படங்கல் நிலையே துரியாதீதமாகவும் உள்ளது. இறைவன் துயிலும் பள்ளிஅறையே வெற்றிக் கனியின் இருப்பிடமாக உள்ளது. அறிவின் வழி சென்று ஜீவாத்மா-பரமாத்மா ஆகும் செயலே பள்ளியறை பூஜையாக, பேரின்ப வீடாக, னித்திய வாழ்வில் ஏற்றி வைக்கும் அடக்கமாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் மாதவன்:* இறைவனிடம் மனிதன் சீதனமாகப் பெற்று வந்த ஆறாவது அறிவு ஐம்புல நுகர்வில் வீணாகாமல், ஒரு மெய்க் குருபிரான் அருளால் காக்கும் செயலே விதியை மதியால் வெல்வதாகும். நம் உயிராகிய இறை வஸ்துவை குருவருளால் தரிசிக்கும் செயலே புண்ணியமாகும்.

*ஜீவசகோதரர் பழனிவேல்:* தோற்றமில்லாத னித்திய இறை வஸ்துவை தன்னுள் சுமந்து வரும் மனிதனிடமே, மெய்யும் பொய்யும் பிரித்துக் காட்டும் பொறுப்பிடம் உள்ளது. இதுவே வேதமாகிய தூலமாக, நினைவாக, அறிவாக, உணர்வாக, சாகாத்தலையாக, அறுசுவை ஒளிக்கும் இடமாக உள்ளது. முன்னிலை குருவாக வரும் ஆசான் அருளால் அவரவருள் துப்புரவாக துலக்கும் ஆசானை அறிந்தால், பித்தாகிய எமனிடமிருந்து விலகி மூல பண்டாரம் எனும் னீதி அமல வாழ்வில் குடியேறி வாழலாம்.

*ஜீவசகோதரர் ராஜேந்திரன்: எண்ணங்களே நம் வாழ்வு* என புத்த பகவான் கூறுவதும், *எண்ணம் போல் வாழ்வு* என திருக்குரான் கூறுவதும் ஒன்றே. பரமாத்மா எனும் தகுதிக்கு மெய்யான இறை வழிபாடே வழி என பகவத் கீதையும், *மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் மிகச்*



Copyright © AMNA Trust, Chennai    September 2024

*சமீபமாய் இருக்கிறது* என சத்திய வேதம் கூறுவதும் ஒன்றே. மதங்களின் உன்னத நோக்கம் உணர்த்தி, பேதம் தீர்த்து பேரின்பம் அனுபவிக்க செய்வது குருபிரானின் அருளமுத மொழியே.

*ஜீவசகோதரர் சந்திரசேகர்:* நிலையற்ற நிம்மதியும் மகிழ்ச்சியும் உள்ள உலக வாழ்வே நித்தியம் என எண்ணுவதே அறியாமை. அறியாமல் செய்த பூஜையும் வழிபாடும் ஆறாம் அறிவை அறிந்த பின்பே மெய்யாகிறது. இறப்பை நோக்கி செல்லும் கடம், திடத்துடன் இருக்கும் போதே நித்திய தேகத்தில் குடியேறி வாழ்வதற்கான செயலுள்ள அறிவே ஆறாம் அறிவு என அறியச் செய்யும் குருபிரானின் அருளே பேரறிவு.

*ஜீவசகோதரர் ஜெய்குமார்:* அறிவின் மேல் நோக்கத்திற்கும் மனதின் கீழ் நோக்கத்திற்கும் நடக்கும் போராட்டமே அவரவரின் அன்றாட நிலை. கீழ்நோக்கமான மனதின் செயலை வென்று அறிவாக மாற்றும் உபாயமே குருபிரான் அருளும் வழி. குருபிரான் அருளிய மெய்யான வழியை உணர்ந்த மக்கள் உள்ளத் தெளிவுடன் உரைத்த பொக்கிஷங்களின் தொகுப்பே ஆதி மார்க்க நீதி அவையின் ஆண்டு மலர். ஆசை கொண்டு அகம் விட்டு புறம் செல்லும் அறிவே மனமெனும் கண்ணாடி ஆகிறது. அதில் படியும் அழுக்கை சுத்தம் செய்வதே அஷ்டாங்க யோகம். ஒளியை குவியச் செய்யும் குவி லென்ஸ் (Lens) போல, மனம் பேலென்ஸ் (Balance) என்ற நிலையில் இருந்து மாறி வயலென்ஸ் (Violence) ஆகும் போது விரிந்து எமனெனும் விஜிலென்ஸாகவும் (Vigilence) குவிந்து சைலென்ஸ் (Silence) ஆகும் போது சிவனாகவும் ஆகிறது.

**குருபிரான் அருளமுதம்:**

ஜீவாதார ஆட்டமாகிய திருவடியின் இரகசியமே வேதத்தின் இரகசியமாகும். உடல் கடந்து அப்பாலுள்ள தோற்றமிலா இறை பொருளை நாம் கண்டுணர உத்தமரின் உயிர்க் களிப்பாகிய செவிச்சுவை வேண்டும். மெய் மகத்துக்கள் அருளும் அறிவித் தெளிவுடன் ஆருயிரின் ரகசியம் அறிந்து சைதன்ய நன்னிலை பெற கவனமும் வைராக்கியமும் வேண்டும், என்ற குருபிரானின் அருளமுதுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

*எல்லாவிதமான உலக ஆசார அனுஷ்டானப் பற்றுக்களையும் விட்டவனாய், சாஸ்திரக் கூட்டங்களை விட்டு நீங்கினவனாய், முழு பிரயத்தனத்தோடும் குருவினையே செவ்வையாய் ஆசிரயிக்க வேண்டும்.*

***~ குரு கீதை***

## 22-08-2024 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வள்ளல் பிரான் அருளிய **தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே...** என்ற திருஅருட்பா பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* தன்னை அறிந்து இன்பமுற தந்திரமாகிய தன் திறத்தின் உபாயம் அருளவும், நிர்குணமாக விளங்கும் ஞான ஆகாயப் பெரு வெளியில் அணுவுக்கு அணுவாக அண்ட பிரம்மாண்டமாக விளங்கும் சிற்றணு வடிவான இறைவனை அறிவதற்கான அறிவை அருளவும் வள்ளல் பிரான் தனது குருபிரானை வெண்ணிலாவாக பாவித்து வேண்டுகிறார்கள்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் எண் 4ன் தொடர்ச்சி:**

இறை சக்தியே மனுவினுள் புகுந்து சர்வ மதங்களையும் உண்டாக்கியதை அறியாத தோஷமே, தன் மதத்தை பிறர் பழிக்கையில் வரும் கோபத்திற்கு காரணம். சர்வ மதங்களின் அடிநாதம் மறலி கை தீண்டாமை என ஆசான் அருளால் அறியும் போதே பேதம் நீங்கி சமத்துவம் உண்டாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் ரியாஸ்:* ஆதி ஆகமத்தில் ஆபிரகாம் என அழைக்கப்பெறும் நபி இப்ராஹிம் 1,24,000 நபிமார்களின் தந்தையாக சமூகமாக அறியப் பெறுகின்றார். சன்மார்க்க வழியை காட்டாத, தன் தந்தை செய்த சாமி சிலைகளை உடைத்து, உடைத்தது சாமிதான் என ஊராரை நம்பச் செய்தாலும் அரச தண்டனைக்கு ஆளானார். இறையருளால் அதிலிருந்து மீண்ட பின் வஹியின் ஆணைப்படி தன் மனைவி மற்றும் குழந்தை இஸ்மாயிலை பாலைவனத்தில் விட்டு வந்தார். வானவர் தலைவர் ஜிப்ரேல் அங்கு உண்டாக்கிய ஜம்ஜம் நீரூற்றால் அவர்கள் தாகம் தீர்ந்து மீண்டனர். இதன் அகமிய ரகசியமாக சாலை ஆண்டவர்கள் ஞான அகவலில் அருளி உள்ளதை, தாகம் தீர்க்க தனிப்பெரும் கடலாக வரும் ஆசான் அருளால் தான் அறிய முடியும்.

**பூரணப் புதையல் -** *ஜீவசகோதரர் சங்கர்:*

மெய் ஆசானே பூரணத்தின் புதையலாக வந்து, வாசி எனும் சார்ந்ததின் வண்ணமாக மாறும் எழுதாத எழுத்தின் ரகசியத்தையும், காலமற்ற இடமாகிய மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் இருக்கும் இறைவனையும் காட்டுகிறார்கள். உயிருக்கு மேலான ஒழுக்கத்தை போதித்து, மும்மலம் கருக முச்சுடர் தோன்றச் செய்கின்றார்கள். அவர்களே பேசிக்கொண்டே இருக்கும் நம் மனதை பேசாமல் மௌனத்தில் ஆக்கும் மௌனி. சுத்த சைதன்ய நாதரின் சொல் ஒரு பொருள் கொண்டு அவரவரின் அகமியத்திலுள்ள நித்திய தேகத்தில் குடியேறி வாழும் வாழ்வே மரணமிலா பெருவாழ்வு. எதார்த்த நன்மனத்தினர் யாவருக்கும் இதனை செயலாக்கி வைக்கும் இடமாகத் திகழ்வதே ஆதி மார்க்க னீதி அவை என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 24-08-2024 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.



*ஜீவசகோதரர் கௌதம்:* ஆசானின் நாவாகிய லிங்கம், சீடனின் செவியாகிய யோனியில் நடத்தும் சிவபோகத்தால் ஓர் இரவில் விளையும் அறிவு தே கமே ரா தங்காத ரிஷி பிண்டம். இதுவே பிறந்ததும் பேசும், பாடும், சுயம்பு லிங்கம் கண்டு வணங்கும் தேவ குழந்தை. தத்துவத்தின் முழு வடிவமாக வரும் குருபிரானே வினையகற்றும் வினாயகராக இருக்கிறார். அவரே அவரவருள் விளங்கும் சுயம்பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூப ஜோதியான அதிசயப் பொருளை நேர்படக் காட்டியருளும் அதிசயத்தின் அதிசயமாக உள்ளார்.

நிலையில்லா நம் மனதை னித்திய செயலால் நிலைக்கச் செய்து, ஆறாவது அறிவை அறிய வைக்கும் அருட்குருவின் இதயாசனத்தில் சேர்ந்து, புலன் பொறி வசத்தில் அகப்படாமல் வாழும் வாழ்வே நித்திய ஆனந்தம். அறியாமை இருளில் அகப்பட்டிருந்த நம்மை, அறிவு எனும் அஞ்சன சலாகையால் விடுவித்த ஆசானின் அருட் கடாட்சம் பெற்ற மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். *வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களின் பாரம் நீக்கி நான் இளைப்பாறுதல் தருவேன்* என்ற சத்திய வேத வாக்கின் படி கர்த்தராகிய குருபிரான் தன் சிவ செங்கோலால் தன்னை அண்டி வந்த மக்களின் பாவம் தீர்த்து புண்ணிய பூமியில் வாழ வழி அருளி பிறவிப்பிணி தீர்க்கிறார்கள் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 29-08-2024 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி, **தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே...** என்ற திருஅருட்பா பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அறிவின் நிலையாக அவரவருள் இருக்கும் வெண்ணிலவே அண்ட பகிரண்டமும் ஆட்டுவிக்கும் அய்யராகிய இயற்கை உண்மை கடவுளாக உள்ளது. சர்வ சம்பத்தும் பொதிந்துள்ள நினைவெனும் ஆகாயமே ஐம்புல நுகர்வுக்கும் காரணமாக உள்ளது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் 04ன் தொடர்ச்சி:**
இறைவன் படைத்த யாவும் மனிதர் யாவர்க்கும் பேதமின்றி இருப்பது போல் அதனை அனுபவிக்கும் ஜீவனும் பேதமின்றியே உள்ளது. சர்வ மதங்களின் அடிநாதமான மறலி கை தீண்டாமையை அறியும் போதே சர்வ வேத வேதாந்தமும், பேதமற்ற ஒன்று என விளங்கும்.

**பூரணப்புதையல் -** *ஜீவசகோதரர் சங்கர்:*
முழுமையை குறிக்கும் பூரணத்தை வேதாந்தமாக சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். பழம் புராதன தெருளமுத வஸ்துவான அதனை அமுதாக அருள்பவரே மெய் ஆசான். உள்ளமாகிய மகா மகசூக்காகிய இதயத்தின் தோற்றமே பூரணம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். உணர்வெனும் கம்பமாக விளங்கும் இதுவே ஐம்புல நுகர்வுக்கும் காரணமாக உள்ளது. **சொப்பனம் – சுழுத்தி – ஜாக்கிரம் – துரியம் - துரியாதீதம்** என்ற ஐந்து அவஸ்தைகளும் கடந்தே ஞானம் உள்ளது. ஞான சூரியனாக வரும் பெரியோர்களின் மனம் அசைவற்ற பிரம்மமாக உள்ளது.

மனதற்ற பரிசுத்தமுடன் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீமன் நாராயணனின் திருவடி நிழல் சேர்ந்தவரே ஆறாவது அறிவின் லட்சணம் அறிந்து உரைக்க வல்லவர். சைவத் திருமேனியராக வரும் பெரியோர்கள் மனதின் மூலம் உண்டாகும் வினையையும் குற்றத்தையும் போக்கிட போதிப்பதே கசடறுக்கும் கல்வி. அதனைக் கற்று உணர்வு நிலையில் இருக்கும் ஜீவாத்மா, பரமாத்மா நிலையை அடைவதே உணர்வுகார ரகிதம்.

மனுவின் தலையில் சின்முத்திரை வடிவாக விளங்கும் நீதி எனும் பொருளான வாசியை ஆசானிடம் முப்பொருள் தத்தம் செய்து, ஆசான் அருளும் உயிர் களிப்பான மெய்ம்மணம் மூலமே அறிய முடியும். குருவருளால் சிவானந்தம் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு வாழவே வையகத்தில் வந்து பிறந்துள்ளோம் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 31-08-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அண்டமும் அதிபாதாளம் அகில மோடமரர் மற்றும்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்திருக்கும் இறைவனானவன் சர்வ படைப்புகளையும் நால்வகை யோனி, எழுவகை தோற்றத்துள் வைத்து படைத்தான். அப்படியான இறைவன் வெளியாகும் இடம், ஒரு மெய் குரு பிரானின் சுத்தத் துறை இருதயம் எனும் தேவ ரகசியச் செயலையே ஆண்டவர்கள் இத் திருப்பாடலின் மூலம் அருளியுள்ளார்கள். ஆதி மான்மியம் - வளர் குழந்தை குமார பருவத்தில்



Copyright © AMNA Trust, Chennai

***மாயாசரீரமாகிய தூலமின்றி எங்கும் எவரும் எக்காலத்தும் எவரையும் திருத்தி ஜீவ ஏற்றத்தில் ஆக்கியதே இல்லை - இனி அப்படி ஆக்கப்போவதுமில்லை யாகையினாலும் -*** என்ற தெய்வத் திருவசனத்தின் மெய்ப் பொருள் யாதெனில், தூலம் கடந்து மெய்ப் பொருளாக, அறிவு வடிவாக, சுயம் பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபமாக வீற்றிருக்கும் இறை வஸ்துவை, முன்னிலை குருவாக வரும் தெய்வத் திருமேனியரிடத்தில், முப்பொருள் தத்தம் செய்தே உணர முடியும் என்பதேயாகும். கயிலாய பரம்பரையாக வரும் தெய்வ புருஷரின் திருச்சன்னதியில் சரணாகதி அடைந்தோரே ஜீவ ஏற்றத்தில் ஏறி ஜீவேசத்தகை வாழ்வு பெற்று பேரின்பம் அனுபவிக்கின்றனர்.

*ஜீவசகோதரி பானுமதி :* **அல் - குரான் : அத்தியாயம் 21 ( அல் அன்பியா) திருவசனம்: 7 & 8**
தாவீது நபியால் சபூர் வேதமும், மூசா நபியால் தவ்ராத் வேதமும், ஈசா நபியால் இன்ஜில் வேதமும் அருளப்பெற்றுள்ளது. வானம், பூமி, சூரியன், சந்திரன் மற்றும் மனித ஆன்மாவின் அற்புத தன்மைகளையும் பெரு வெடிப்பு கோட்பாடுகளைப் பற்றிய சிறப்பையும் அருளும் இந்த அத்தியாயத்தின் மெய்ப்பொருளை குருபெருமான் அருளால் அறிந்து மனித குலம் மேம்பாடடைய வேண்டும் என்ற பெரும் நோக்கத்துடன் இது அருளப்பெற்றுள்ளது.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**

குறைவிலா நிறைவாகவும், கோதிலா அமுதாகவும் நின்றிலங்கும் பேரறிவே பூரணம். செங்கனதி கங்கையாகிய குருபிரானின் ஒலிப் பிரவாகத்தின் மூலமே மூச்சு முளைத்து வரும் மூலப் பொட்டலாகிய திருச்சிற்றம்பலப் பொருளைக் குறிக்கும் வாசி எனும் தேவரகசியத்தை அறிய முடியும். இரண்டெனும் வாசியாகிய சிவமயப் பொருளே பரிபூரணம், பேசரிய பாதம், தில்லையம்பதி, துரியநிலை கடந்த ஓங்காரம் என ஒவ்வொரு மனுத் தலையுள்ளும் ஒளிமயமாய் மிளிர்கிறது. இதனை அம்பலவாணராக வரும் ஆசானின் தயவால் அறிந்த புண்ணியரே ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாக வாழ்பவர்கள் என்ற ஆசீர்பாத அருளமுதுடனும், பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.


Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**04-08-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **பரமனே உருவெடுத்து...** என்ற **அமுத கலைக் ஞான போதம்** பாடல் தோடி ராகத்தில் பாடப்பெற்று அவை மலர்ந்தது. தோடி ராகத்திற்கான பாடல்கள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்க பெற்று அவை இனிதே நிறைவானது.

**11-08-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அமுத கலைக் ஞானபோதம் இரண்டாம் காண்டம்** செய்யுளில் இருந்து **துறந்ந மனத் தனியோக ருளத்தில் பூக்கும்...** என்ற பாடல் தோடி ராகத்தில் பாடப் பெற்று அவை மலர்ந்தது. தோடி ராகத்திற்குரிய பாடல்கள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*எவர், சகல சந்நேகங்ஙளும் ஒழிந்து போகும்படிச் செய்து, பரம ரகசியமான விஸ்வரூப தரிசனத்தைச் சர்வ வேதங்ஙளும் ஒன்றுபடும்படி னிற்கக் காட்டுகின்றாரோ, அத்தன்மைய குருவாகிய ஈசுவரனைப் பூஜிக்கின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 – வருங்கால அவை னிகழ்வுகள்

**06-10-2024 - ஞாயிற்றுக்கிழமை:** குருபிரான் **சாலை இரவி அப்பா அவர்களின் அவதாரத் திருனாள்** சிறப்பு நிகழ்ச்சியும், ஆதி மார்க்க னீதி அவையின் செயலாளர் திரு. மணிவண்ணன் அவர்களின் பேரப்பிள்ளைகள் **சித்தார்த்தன் மற்றும் நிரஞ்ஞன் அவர்களின் மூன்றாம் ஆண்டு பிறந்தநாள்** விழாவும் சென்னை - அண்ணா நகரில் உள்ள Sea Shell Restaurant (சீஷெல் உணவகத்தில்) சிறப்பாக நடைபெற உள்ளது.

**21-10-2024 – திங்கள்கிழமை:** குருபிரான் சாலை இரவி அப்பா அவர்கள் முன்னிலையில் ஜீவதம்பதியர் பாலாஜி - அனுஷா இவர்களின் மகன் பூஷன் திருமண வைபவம் திருவண்ணாமலையில் நடைபெற உள்ளது.

**27-10-2024 – ஞாயிற்றுக்கிழமை:** குருபிரான் சாலை இரவி அப்பா அவர்கள் சிவகாசியில் எழுந்தருளி ஞான தேட்டமுள்ள னன்மன மக்களை சந்தித்து அருளமுத வர்ஷிப்பு வழங்க உள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 ஆகஸ்ட் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 97**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**

**Account Number: 50200047470073**

**IFSC: HDFC0000323**

**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 38 – Month: September 2024*



Copyright © AMNA Trust, Chennai